TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064880

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2020 FIR No. மு.த.அ. எண் 09/2020 Date: நாள் 13.11.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.11.2020 16.00 hrs Date to : நாள் வரை 12.11.2020 18.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.11.2020 Time : நேரம் 1000 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV Time : நேரம் 1000 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் ஒரு கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கடலூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. அமுதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ——— Place of Issue : வழங்கப்பட்ட இடம் ———
(f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர், (g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**செ.பார்வதம், வயது 40, க/பெ. ஜெயப்பிரகாஷ், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 13.11.2020 ந்தேதி காலை 10.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 13.11.2020 அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் – துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கடலூர் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி பெறப்பட்ட இனிப்புகள் மற்றும் பட்டாசுகள் – நடவடிக்கை எடுக்க வேண்டி

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/11/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13/11/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.11.2020.

Name: பெயர் E.S.T. MELWYN RAJASINGH
Rank: நிலை DSP..........No. எண் ..........
V&AC, CUDDALORE

புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் 12.11.2020 ஆம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கடலூர், செம்மண்டலம், தௌலத் நகரில் உள்ள துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம் இயங்கி வருவதாகவும், இவ்வலுவலகத்திற்கு, வருகிற தீபாவளி திருநாளை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் இவ்வலுவலக கட்டுப்பாட்டில் உள்ள இதர தொழில் சம்மந்தமான நிறுவனங்கள், அலுவலகங்கள், அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து பரிசு பொருட்கள், பணம், இனிப்பு வகைகள், பட்டாசு பாக்கெட்டுகள், இன்ன பிற பரிசு பொருட்கள் கொடுத்து வருவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை நான், உடனடியாக கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 12.11.2020 ந்தேதி மாலை சுமார் 02.30 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தேன். மேலும் எனது தலைமையில் மேற்சொன்ன அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதையும் தெரிவித்து, திடீர் ஆய்வுக்கு உதவியாக இருக்க வேண்டியும் கேட்டுக்கொண்டேன். அதன்படி காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலகத்தில் இருந்த காவல் அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களை தயார் நிலையில் இருக்க சொல்லி உத்தரவிட்டார். பின்னர் நானும், காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 03.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் மேற்சொன்ன அலுவலகத்திற்கு புறப்பட்டோம். மேற்சொன்ன அலுவலகமானது கிழக்கு மேற்காக செல்லும் கடலூர் – பண்ருட்டி சாலையின் வடபுறமாக திரும்பி தௌலத் நகரில் இடதுபுறமாக இரண்டாவது குறுக்கு தெருவில் எண்.53/13 என்ற எண்ணில் உள்ள துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் எங்களது வாகனங்களை நிறுத்தி பிறகு சிறிது நேரம் கண்காணித்து, பின்னர் மாலை சுமார் 03.50 மணிக்கு வந்து சேர்ந்தோம். அலுவலகமானது தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் கட்டிடத்தால் அமைக்கப்பட்டிருந்தது. தரை தள அலுவலக முகப்பில் துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் என்று 3 X 4 அடி அளவுள்ள இரும்பு தகர ஷீட்டில் பெயிண்டால் தமிழில் எழுதப்பட்டிருந்தது. அந்த

அலுவலகத்தின் முதல் தள அலுவலக முகப்பில் இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் என்று 3 X 4 அடி அளவுள்ள இரும்பு தகர ஷீட்டில் பெயிண்டால் தமிழில் எழுதப்பட்டிருந்தது. எனவே முதல் தளத்திற்கு திடீர் சோதனை செய்ய வேண்டியுள்ளதால், எனது வேண்டுகோளை காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்து, காவலர்களை பாதுகாப்பு பணிக்கு முதல் தளத்திற்கு நியமிக்கப்பட்டது. தொடர்ந்து தரை தள அலுவலகத்தினுள் நுழைந்தவுடன் முகப்பில் கிரில் கேட் காணப்பட்டது. அதற்கடுத்தாற்போல் அலுவலகத்தில் பிரதான வாயிலில் உள்ள மரக்கதவு திறந்து இருந்தது. அலுவலகத்தில் முதல் அறையானது (8 X 12 அடி அளவுள்ளது), அந்த அறையில் மேற்கு திசை பார்த்து அமைந்துள்ள மேஜையில் Dell Computer Monitor, Dell CPU, HP Laser Printerருடன் இருந்த இருக்கையில் பெண் அலுவலர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருடன் ஒரு ஆண் நபர் அருகில் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவருக்கு பக்கத்தில் வடக்கு பார்த்தவாறு மர பீரோ ஒன்றும், மர டேபிள் ஒன்றும் இருந்தது. அந்த பெண் அலுவலரிடம், என்னையும், உடன் வந்த காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் மற்றும் ஆய்வு குழுவினர் அனைவரது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்தபோது தனது பெயர் க.ஜாஸ்மின் பானு, வயது 36, க/பெ, முகமது யாசின், இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்தில் 14.08.2020 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்துக்கொண்டார். பின்னர் நான் அவர்களிடம் அலுவலகத்தை ஆய்வு செய்யப்போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்துக் கொண்டோம். தொடர்ந்து அருகில் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க தனது பெயர் N.சந்தானம், வயது 55, த/பெ, நாராயணப்பிள்ளை, அலுவலக காவலர் என தெரிவித்தார். அந்த முதல் அறையை (8X12 அடி அளவுள்ளது) சோதனையிட அந்த அறையில் அலுவலக ஆவணங்கள் மட்டுமே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனையிடப்பட்டதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. தொடர்ந்து மேற்சொன்ன அறைக்கு மேற்கு புறத்தில் அறை திறந்து காணப்பட்டது. அவ்வறையானது (10X15 அடி அளவுள்ளது) அறையில் 3X4 அடி அளவுள்ள மர டேபிள் மற்றும் அதன் மேல் அலுவலக கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இருக்கை காணப்பட்டது. இருக்கையின் வலது புறத்தில் acer Computer CPU, Monitor, HP Laser Jet M1005MFP இருந்தது. இந்த இருக்கையின் அலுவலரை பற்றி விசாரிக்க துணை இயக்குநர் அறை என தெரிவித்தார்கள்.

அறையின் ஒரு பகுதியில் தரையில் தீபாவளி திருநாளை முன்னிட்டு இனிப்பு வகைகள் மற்றும் பட்டாசு பாக்ஸ்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு பதியப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | எடை & எண்ணிக்கை | விலை | அளித்தவர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 1. | Haldiram's, Nagpur, Delicios Joy Soan Papdi & Moong Dal | 400 கிராம் X 1 | ரூ.125 | T.Arumugam, Vice President, Pioneer Jellice India P. Limited, Cuddalore - 607005 |
| 2. | Haldiram's, Nagpur, Delicios Joy Soan Papdi & Moong Dal | 400 கிராம் X 1 | ரூ.125 | T.Arumugam, Vice President, Pioneer Jellice India P. Limited, Cuddalore - 607005 |
| 3. | Dry Fruits Nuts Box | 850 கிராம் X 1 | ரூ.930 | Karthick - 8940063996, Sridhar – 9384473022, Supreme Dyechem (P) Ltd, Sipcot, Cuddalore |
| 4. | SVM Sweets / Snacks / Cakes | 500 கிராம் X 1 | ரூ.250 | T.Vimalraj, Sr Officer-HR, Crimsum Organics (P) Ltd, Kudikadu, Cuddalore |
| 5. | Haldiram's, Festive Delight | 750 கிராம் X 1 | ரூ.210 | T.Arumugam, Vice President, Pioneer Jellice India P. Limited, Cuddalore - 607005 |
| 6. | Haldiram's, Festive Delight | 900 கிராம் X 1 | ரூ.240 | M.R.Ramesh, Officer HR, TANFAC Industries, SIPCOT, Cuddalore |
| 7. | Agarwal Sweets | 1000 கிராம்X 3 | ரூ.1500 | - |
| 8. | Agarwal Sweets | 500 கிராம் X 5 | ரூ.1250 | - |
| 9. | Agarwal Sweets | 250 கிராம் X 1 | ரூ.125 | - |
| 10. | Agarwal Sweets – Dry Fruits | 1 பெட்டி | ரூ.950 | - |
| 11. | Agarwal Sweets – Dry Fruits | 2 பெட்டி | ரூ.1300 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | SVM Sweets, Mudaliyarpet | 500 கிராம்X 5 | ரூ.1250 | - |
| 13. | Adayar Aananda Bavan | 500 கிராம்X 3 | ரூ.1050 | - |
| 14. | Abirami Sweets | 500 கிராம்X12 | ரூ.3000 | - |
| 15. | Aavin Mysorebak | 250 கிராம் X 2 | ரூ.240 | - |
| 16. | Aavin Ghee | 500 மி.லி X 1 | ரூ.265 | - |
| 17. | Haldiram's, Cavish Delight | 1.1 கிராம் X 1 | ரூ.300 | - |
| 18. | TRV Cashew | 250 கிராம் X 1 | ரூ.175 | - |
| 19. | Radha Sweets Cashew | 500 கிராம் X 1 | ரூ.350 | - |
| 20. | Cashew | 500 கிராம் X 1 | ரூ.350 | - |
| 21. | Haldiram's, Divine Delight | 900 கிராம் X 1 | ரூ.240 | - |
| 22. | Abiram Sweets, No.1, Bharathi Road, Cuddalore | 1000 கிராம்X 4 | ரூ.1600 | - |
| 23. | Abiram Sweets, No.1, Bharathi Road, Cuddalore | 500 கிராம்X 8 | ரூ.1600 | - |
| 24. | Sugar | 5 கிலோ X 1 | ரூ.250 | - |
| 25. | Sugar | 3 கிலோ X 1 | ரூ.150 | - |
| 26. | Sri Krishna Pyritechnic, No.898, Kamak Road, Sivakasi – 626 189 | 8 பெட்டிகள் | ரூ.14,800 | - |

மேற்சொன்ன பட்டியலின்படி வரிசை எண்.1 முதல் 6 வரை தவிர்த்து 7 முதல் 26 வரையுள்ள பொருட்களில் பரிசு அளித்த நபர்களின் பெயர் விவரம் தெரியவில்லை. இவ்வறையின் அடுத்த அறையில் (10X10 அடி அளவுள்ளது) ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவரை பற்றி விசாரிக்க தனது

பெயர் N.புருஷோத்தமன், வயது 59, த/பெ, S.நாகப்பன், பதிவறை எழுத்தராக பணிபுரிவதாக தெரிவித்து, தனது அலுவலக அடையாள அட்டையை காண்பித்தார். அந்த அறையை சோதனையிடப்பட்டதில் அலுவலக ஆவணங்கள் மட்டும் காணப்பட்டன, பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. பின்னர் அந்த அறைக்கு வெளியில் அதை ஒட்டியவாறு கிழக்கு புறமாக அமைந்துள்ள மற்றொரு அறையை (10X10 அடி அளவுள்ளது) சோதனையிட அந்த அறையில் அலுவலக ஆவணங்கள் மட்டுமே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனையிடப்பட்டதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. பின்னர் அந்த அறைக்கு பின்புறம் மேற்கு புறத்தில் உள்ள அறையை (10X8 அடி அளவுள்ளது) சோதனையிட அந்த அறையில் அலுவலக ஆவணங்கள் மட்டுமே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனையிடப்பட்டதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. பின்னர் அந்த அறையை ஒட்டியவாறு கிழக்கு புறமாக அமைந்துள்ள குளியலறை (3X3 அடி அளவுள்ளது) மற்றும் கழிவறையை (3X3 அடி அளவுள்ளது) சோதனையிடப்பட்டதில் பணமோ அல்லது பொருளோ ஏதுமில்லை. பின்னர் மாலை சுமார் 06.00 மணிக்கு அலுவலகத்தினுள் வந்த பெண் ஒருவரை விசாரிக்க அவர் இவ்வலுவலகத்தின் துணை இயக்குநராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரிடம் அவர் பெயர் விவரம் பற்றி விசாரிக்க, தனது பெயர் செ.பர்வதம், வயது 40, க/பெ, ஜெயப்பிரகாஷ், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் எனவும் தெரிவித்தார். மேலும் தான் கடந்த 11.11.2020ந்தேதி தற்செயல் விடுப்பில் இருந்துவிட்டு, ஏற்கனவே திட்டமிட்டபடி நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தினர் மூலம் 12.11.2020ந்தேதி தொழிற்சாலை பாதுகாப்பு பயிற்சி முகாம் சம்மந்தமாக நான், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், இணை இயக்குநர், கடலூர் ரா.ரவிச்சந்திரன் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருச்சி, கூடுதல் இயக்குநர் R.சித்தார்த்தன் ஆகியோருடன் தொழிற்சாலை பாதுகாப்பு சம்மந்தமாக என்.எல்.சி. நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு சம்மந்தமான வகுப்புகள் எடுத்து முடித்து பின்னர் அங்கிருந்து கிளம்பி தான் மட்டும் மாலை சுமார் 04.30 மணிக்கு கடலூர், காரைக்காடு கிராமத்தில் சிப்காட் பகுதியில் Srivari CDR 1134 என கோடிட்ட நிறுவனத்தை முறை ஆய்வு மேற்கொண்டு, பின்னர் அங்கிருந்து கிளம்பி இவ்வலுவலகம் வந்து சேர்ந்தேன் என தெரிவித்தார். மேலும் சோதனையின்போது துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கடலூர் அலுவலக வருகை பதிவேடு கைப்பற்றப்பட்டது. மேலே பட்டியலிடப்பட்டதில் உள்ள பொருட்கள் அனைத்தும் மேற்சொன்ன துணை இயக்குநர் பர்வதம் வசம் பொருட்கள் எந்த சேதமுமின்றி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் உள்ள கம்ப்யூட்டர், அதனுடன் இணைக்கப்பட்ட பிரிண்டர் மற்றும் அனைத்து ஆவணங்களையும் உள்ளது உள்ளபடியே அந்தந்த இடத்தில் வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 04.00 மணி முதல் இரவு 06.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) (அ. அமுதா), உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 13.11.2020 பகல் 10.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

13/11/2020

Deputy Supdt. of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore.